Crl.Misc.39

# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2017

**P.W**.1

| | |
|---|---|
| Name | : **திரு.சுரேஷ்** |
| Father/Husband Name | : திரு.ஆதி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. குவி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டினம் கிராமத்தில் குடியிருந்து கார்பெண்டராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த தீனன் எனது தம்பி ஆவார். மற்றொரு நபரான அசோக்குமார் என் அண்ணன் மகன் ஆவார்.

2) கடந்த 24.2.2017 ம் தேதி இரவு 9.30 மணியளவில் எனது தம்பி தீனனும் மற்றும்அசோக்குமாரும் வேலையை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் கல்பாக்கத்திலிருந்து கூவத்தூர் நோக்கி இ,.சி.ஆர்.சாலையில் வந்து கொண்டிருந்தபோது அடையாளச்சேரி மாந்தோப்பு அருகே வந்தபோது எதிரே வந்த அரசு பேருந்து ரோட்டின் வலது பக்கமாக வந்து அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் தீனனுக்கு தலையிலும்,

உடம்பில் மற்ற இடங்களில் காயம் ஏற்பட்டது. அசோக்குமாருக்கு தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் ஏற்பட்டு இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். எனக்கு கண்ணன் என்பவர் போன் செய்து தகவல் சொன்னார். கேள்விபட்டு நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். காயம்பட்ட அவர்களை ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது குறித்து காவல் நிலையத்தில் நான்புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் கண்ணன் என்பவர் எழுதினார். நான் கையெழுத்து போட்டேன். நான் சம்பவ இடத்திற்கு தகவல் தெரிந்த அரை மணி நேரத்திற்குள் வந்தேன். நான் வந்த பிறகு போலிசார் அங்கு வந்தார்கள். போலிசார் விபத்து சம்பந்தப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்திவிட்டு இடத்தை குறித்து கொண்டார்கள். என்னையும், கண்ணனையும் அந்த இடத்திலேயே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதன்பிறகு தான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். விபத்தில் இறந்தவர்களை ஆம்புலன்சு மூலம் நான் தான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன். விபத்து குறித்து நேரிடையாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். கேள்விபட்டு தான் சென்று பார்த்தேன். நான் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றாலும் விபத்தில் இறந்துபோனவர் வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாமல் குடிபோதையில் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி

விபத்து ஏற்பட காரணமாக இருந்தார் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் என் தம்பி என்பதால் இழப்பீடு கிடைக்கவேண்டி வழக்கிற்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீட கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். பொய்யான புகார் அடிப்படையில் தவறான சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2017

**P.W**.2

| | |
|---|---|
| Name | : **திரு.கண்ணன்** |
| Father/Husband Name | : திரு.கந்தன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் இல்லை. குவி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டினம் கிராமத்தில் குடியிருந்து எலக்டிரிஷனாக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த தீனன் மற்றும் அசோக்குமாரை தெரியும். சாட்சி பிரபுவை தெரியும்.**

**2) கடந்த 24.2.2017ம் தேதி நானும், பிரபுவும் எங்கள் வேலையை முடித்துவிட்டு சைக்கிளில் கல்பாக்கத்திலிருந்து எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தபோது தீனன் மற்றும் அசோக் ஆகியோர் கல்பாக்கத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்பாக வீட்டிற்கு சென்றவர்கள் கூவத்தூர் காவல் நிலையம் அருகே எதிரே வந்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நாங்கள் சென்று பார்த்தபோது**

அவர்கள் பலத்த காயம் ஏற்பட்டு அங்கேயே இறந்துவிட்டு இருந்தார்கள். அவர்கள் சென்ற இருசக்கர வாகனம் விபத்தில் தீப்பிடித்து சேதம் அடைந்திருந்தது. இது குறித்து சுரேஷ் என்பவருக்கு தகவல் அளித்து பிறகு ஆம்புலன்சு வரவழைத்து அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,**

தினமும் நான் வேலையை முடித்து கல்பாக்கத்திலிருந்து எனது வீட்டிற்கு சைக்கிளில் செல்வேன். பிரபு என்னுடன் சைக்கிளில் அமர்ந்து வருவார். வழக்கமாக இரவு 8.00 , 8.30 மணிக்கு எனது வேலை முடியும். நான் காத்தான்கடை அருகே வந்தபோது விபத்தில் இறந்த இருவரும் என்னிடம் கைகாட்டி விட்டு சென்றுவிட்டார்கள். பொதுவாக இ.சி.ஆர்.சாலையில் எப்போதும் வாகன போக்குவரத்து இருக்கும்என்றால் சரிதான். இரவு நேரத்தில் எதிரே வரும் வாகனங்களின் விளக்கு வெளிச்சம் தான் தெரியும் என்றாலும் வாகனம் தெரியாது என்றாலும் சரிதான். காத்தான்கடைக்கும், மாந்தோப்புக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தெரியாது. ஏறக்குறைய முக்கால் கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் அரைகிலோமீட்டர் இருக்கும். நான் விபத்தை நேரிடையாக பார்க்கவில்லை என்றாலும் சத்தம் கேட்டு சென்று பார்த்தேன் என்றாலும் சரியல்ல. நேரிடையாக பார்த்தேன். ஆம்புலன்சில் விபத்தில் இறந்தவர்களை அனுப்பிய பிறகு தான் சுரேஷ் அங்கு வந்தாரா என்றால் ஆமாம். நான் சொன்ன முறையில் விபத்து நடக்கவில்லைஎன்றாலும் நான் விபத்து எதையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோன நபர் எங்கள் ஊர்காரர் என்பதால் பார்க்காத விபத்தை நேரில் பார்த்ததாக

தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த தீனன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் மது போதையில் அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டி தவறி விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2017

**P.W**.3

| | |
|---|---|
| Name | : **திரு.ஆனந்தன்** |
| Father/Husband Name | : திரு.கிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. குவி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டினம் கிராமத்தில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த தீனன் மற்றும் அசோக்குமாரை தெரியும்

2) கடந்த 24.2.2017 ம் தேதி தீனனும் அசோக்குமாரும் வேலையை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் கல்பாக்கத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது கூவத்தூர் பழைய காவல்நிலையம் அருகே வந்தபோது பேருந்து மோதி இருவரும் விபத்தில்இறந்துவிட்டதாக கண்ணன் என்னிடம் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். விபத்தில் இறந்த இருவரையும் ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,**

விபத்து பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. கேள்விபட்டு தான் சென்று பார்த்தேன்.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.213/2017

**P.W**.4

| | |
|---|---|
| Name | : திரு.ராஜேஷ்குமார் |
| Father/Husband Name | : திரு.செல்லப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. குவி.மு.ச.பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டினம் கிராமத்தில் குடியிருந்து வெல்டராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த தீனன் மற்றும் அசோக்குமாரை தெரியும்

2) கடந்த 24.2.2017 ம் தேதி தீனனும், அசோக்குமாரும் வேலையை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் கல்பாக்கத்திலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது கூவத்தூர் பழைய காவல்நிலையம் அருகே வந்தபோது பேருந்து மோதி இருவரும் விபத்தில் இறந்துவிட்டதாக கண்ணன் என்னிடம் சொன்னார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். விபத்தில் இறந்த இருவரையும் ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

விபத்து பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. கேள்விபட்டு தான் சென்று பார்த்தேன்.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.